இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 17.07.2026

# பழனிக்கே மொட்டை போடும் விஜய் ஆட்சி!

‘அரசாங்கப் பணத்தைத் தொடமாட்டேன், தொட்டால் விட மாட்டேன், தொட்டவர்களையும் விட மாட்டேன்’ என்று முதலமைச்சர் விஜய் விட்ட பஞ்ச் டயலாக் தினந்தோறும் பஞ்சர் ஆகி வருகிறது.

★ அவர் யோக்கியராக இருந்தால், அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் பல லட்சம் பணம் விளையாடியதாகக் குற்றம் சாட்டப்படும் அமைச்சர் ஆனந்த் பதவியைப் பறித்திருப்பார்.

★ அவர் யோக்கியராக இருந்திருந்தால், ‘பவுடர்’ பயன்படுத்தி மாட்டிக் கொண்ட அமைச்சர் சரத்குமார் பதவியைப் பறித்திருப்பார்.

★ அவர் யோக்கியராக இருந்திருந்தால், தனது ரசிகையால் பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் பதவியைப் பறித்திருப்பார்.

★ அவர் யோக்கியராக இருந்திருந்தால், பழனிக்கே மொட்டை போட்ட அமைச்சர் ரமேஷ் பதவியைப் பறித்திருப்பார்.

இவை எதையும் முதலமைச்சர் விஜய்யால் செய்ய முடியாது. ஏனென்றால் இத்தகைய துர்நாற்ற சக்திகள் எம்.எல்.ஏ.க்களாக இருந்தால்தான் அவரால் முதலமைச்சராக இருக்க முடியும்.

‘யோக்கியன் வர்றான், சொம்பை எடுத்து உள்ளே வை’ என்ற டைப் ஆள்தான் அறநிலையத் துறை அமைச்சராக இருக்கும் ரமேஷ் என்பதை அவரை அறிந்தவர்கள் அனைவரும் அறிவார்கள். இப்படி ஒரு ஆளுக்கு அமைச்சர் பதவி கிடைத்தால் என்ன செய்வார்? அப்பாவி மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய வேலையையும் பார்த்துவிடுவார் என்பதற்கு உதாரணம் தான் பழனியில் நடந்த மெகா ஊழல் ஆகும்.

பழனி முருகன் கோவிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான இடத்தை 2 கோடி ரூபாய்க்கு யாரோ ஒருவருக்கு எழுதிக் கொடுத்து விட்டார் அமைச்சர் ரமேஷ். ‘மாட்டிக் கொண்டதும்’ திருட்டு முழி முழிக்கிறார். ஊடகங்களின் முன்னால் மட்டுமல்ல; சட்டமன்றத்திலும் தெனாவெட்டாகப் பேசும் அமைச்சர் ரமேஷுக்கு இப்போது மீடியாக்களைச் சந்திக்கும் போது மட்டும் ஏன் வேர்க்கிறது?

இதில் தொடர்புடைய பழனி கோவில் இணை ஆணையராக இருந்த மாரிமுத்துக்கு – இந்து சமய அற நிலையத்துறை இணை ஆணையர் செயல் அலுவலர் பதவி உயர்வு கொடுத்து பரிகாரம் செய்துள்ளார் அமைச்சர் ரமேஷ்.

**ரூ.100 கோடி நிலம் கைமாறியவுடன் இணை ஆணையருக்கு பதவி உயர்வு கொடுத்தது எதனால்? கேட்டால், ‘அதற்காக வழக்கமாக வரும் பதவி உயர்வைத் தராமல் இருக்க முடியுமா?’ என்று மீடியாக்களிடம் கேட்கிறார் அமைச்சர் ரமேஷ். வழக்கத்துக்கு மாறாக, முறைகேடாக நடந்து கொண்ட ஒருவருக்கு எப்படி பதவி உயர்வு வழங்கலாம் என்பதுதான் நமது கேள்வி. முறைகேடான பத்திரப் பதிவுக்கு உடந்தையாக இருந்த அவருக்கு மூன்றே நாளில் இந்தப் பதவி உயர்வை வழங்கியது அமைச்சர் ரமேஷுக்கு தெரியாமல் நடந்ததா?**

‘சார் பதிவாளர் தெரியாமல் செய்து விட்டார், சார் பதிவாளரை சஸ்பெண்ட் செய்துவிட்டோம்’ என்கிறது விஜய் அரசு. 100 கோடி சொத்தை 2 கோடிக்கு பதிவு செய்வதற்கான தண்டனை, ஒரு சார்பதிவாளரின் சஸ்பெண்டோடு முடிந்து விட்டதா? ஒரு சார்பதிவாளர் நினைத்தால் எத்தனை ஆயிரம் கோடி சொத்தையும் யாருக்கும் எழுதிக் கொடுத்து விட முடியுமா? யார் கொடுத்த தைரியத்தில் சார்பதிவாளர் இப்படி நடந்து கொண்டார்? அதுதான் விசாரிக்க வேண்டியது ஆகும்.

இந்த விவகாரம் தொடர்பாக இரண்டு அமைச்சர்கள் சேர்ந்து தலைமைச் செயலகத்தில் வைத்து பேட்டி கொடுத்தார்கள். ஒருவர் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். இன்னொருவர் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன். இவர்கள் இருவரும் இருவேறு கருத்துக்களை ஊடகங்களுக்கு முன் சொன்னார்கள்.

“சார் பதிவாளர் பணியில் இருந்தவர் விடுமுறையில் சென்றதால் ஜூலை 6 ஆம் தேதி கூடுதல் பொறுப்பாக இருந்த ஜஸ்டின் மணிகண்டன் என்பவர் சார்பதிவாளர் பொறுப்புக்கு வருகிறார். அவருக்கு நிலம் குறித்த தகவல் சரிவரத் தெரியாததால் அந்த நிலத்தை அவர் ஜூலை 6 ஆம் தேதி பதிவு செய்து கொடுத்துவிடுகிறார்” என்கிறார் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ்.

‘எல்லாம் தெரிந்தே நடந்துள்ளது’ என்கிறார் பத்திரப்பதிவு அமைச்சர் லோகேஷ் தமிழ்ச் செல்வன். ‘‘பழனியில் தவறு நடந்ததை ஏற்றுக் கொள்கிறேன். நீதிமன்ற வழிகாட்டுதல் அடிப்படையிலேயே கிரயம் செய்ததாக சார்பதிவாளர் கூறினார். அந்தப் பதிவை தற்போது நிறுத்தி வைத்துள்ளோம். சார்பதிவாளருக்கு மேல் யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்கிறார் அமைச்சர் லோகேஷ் தமிழ்ச் செல்வன்.

**இருவரது பேட்டிக்குள் எவ்வளவு முரண்பாடுகள். ‘நிலத்தைப் பற்றியே தெரியாது’ என்கிறார் ஒரு அமைச்சர். ‘தெரிந்தே செய்துள்ளார்கள்’ என்கிறார் இன்னொரு அமைச்சர். மாட்டிக் கொண்டதும் உளறுகிறார் அமைச்சர் ரமேஷ் என்பது இதன் மூலம் தெரிகிறது.**

பழனி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை தனிநபர் பத்திரப்பதிவு செய்ததை ரத்து செய்து உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அதிரடி உத்தரவு போட்டுள்ளது.

“பத்திரப்பதிவுத் துறையும் தனி நபர்களும் உரிய எதிர் மனுதாரர்களைச் சேர்க்காமல் தனி நீதிபதியிடம் முறைகேடாக நீதிமன்றத்தை ஏமாற்றி உத்தரவு பெற்றுள்ளனர்” என்று நீதிபதிகள் கருத்துத் தெரிவித்து உள்ளனர். “பத்திரப் பதிவுத்துறை விதிகளை முறையாகப் பின்பற்றாமல் பத்திரப்பதிவு அலுவலர்கள் எவ்வாறு இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள்?” என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பி உள்ளார்கள்.

**“மதம், வழிபாடு சம்பந்தமான இடங்களை பதிவு செய்யும் போது பிரச்சினைகள் இருந்தால் அனைத்துத் தரப்பு விசாரணையும் முடித்த பின்பு பதிவு செய்ய வேண்டும்” என்ற விதி உள்ளது. அதனை முற்றிலும் அதிகாரிகள் மீறி இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த தைரியத்தைக் கொடுத்தது யார்? அமைச்சர் ரமேஷுக்குத் தெரியாமல் இந்தப் பதிவு நடந்திருக்காது. அவர் இதற்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்.**

●●

## எனக்கு மடியில் கனமில்லை; வழியில் பயமில்லை!

# அரசு என்னை திட்டமிட்டு வழக்கில் இணைத்துள்ளது!

## விசாரணைக்கு பின் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

**சென்னை, ஜூலை 17 -**

**கரூர் மாவட்டத்தில் மாநில நெடுஞ்சாலைத்துறை சார்பில் போடப்படாத சாலைக்கு ரூ.3.23 கோடி நிதி ஒதுக்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின்படி கடந்த மாதம் லஞ்ச ஒழிப்புத்துறை, முன்னாள் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் உள்ளிட்ட 9 அரசு ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததார் மீது வழக்கு பதிவு செய்தது.**

இதுதொடர்பாக விளக்கம் அளிக்க முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு லஞ்ச ஒழிப்புத் துறை சம்மன் அனுப்பியது. அந்த சம்மனை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் காலை சென்னை ஆலந்தூரில் உள்ள லஞ்ச ஒழிப்புத் துறை தலைமை அலுவலகத்தில், விசாரணை அதிகாரிகள் முன்பு நேரில் ஆஜரானார். அவரிடம் வழக்கு தொடர்பாகவும், சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் படி, அதிகாரிகள் மாலை 4 மணி வரை விசாரணை நடத்தினர். அப்போது முன்னாள் அமைச்சர் அளித்த பதிலை வாக்கு மூலமாக அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர்.

பின்னர் 5 மணி நேரம் விசாரணை முடிந்து, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு நிருபர்களிடம் கூறியதாவது:-

‘என்னுடைய சிங்கப்பூர் மருத்துவ பரிசோதனைக்கு பின்னால், அன்றைக்கு விமான நிலையத்தில் சொன்னேன். காவல்துறை அழைக்கிற போது நான் கட்டாயம் செல்வேன் என்று. அதே நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றம் காவல்துறைக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டது. அதன் அடிப்படையில் காவல்துறையை சேர்ந்த கூடுதல் எஸ்பி நேரில் ஆஜராக வேண்டும் என்று சம்மன்



வழங்கினார். அதன்படி நான் 10.45 மணிக்கு லஞ்ச ஒழிப்புத் துறை வளாகத்திற்கு வந்தேன். விசாரணை அதிகாரி என்னிடம் 11 மணிக்கு விசாரணையை தொடங்கினார்கள்.

தற்போது நான் வெளியே வரும் வரை விசாரணை மேற்கொண்டார்கள். பல்வேறு கேள்விகளை கேட்டனர். உண்மைகளை நான் அவர்களிடம் பதில் அளித்து இருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன். எனக்கு மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை. ஏன் என்றால் நான் எந்த வித குற்றமும் செய்யாதவன். அரசாங்கம் என்னை திட்டமிட்டு என்னை இணைத்துள்ளனர். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்பதால், இதற்கு மேல் நான் எதையும் சொல்ல முடியாது. வரும் 28ம் தேதி இந்த வழக்கு நீதிமன்றத்தில் வரவுள்ளது. நீதிமன்றத்தில் நான் நீதியை எதிர்பார்த்து இருக்கிறேன்.

ஆட்சி மாறினாலும், அதே காவல்துறையினர் தான் தற்போதும் பணிபுரிகின்றனர். எனவே, காவல்துறை மீது நான் வருத்தப்படுவது அவசியம் இல்லை. காரணம், அவர்கள் முறைப்படி விசாரணை செய்தார்கள். நான் முறைப்படி பதில் சொல்லி இருக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பேட்டியளித்தார்.

## கழகத் தலைவர் முதல்வராக இருந்தபோது அவரது சிந்தையில் உதித்த

# வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை முழுமையாக முடக்கிவிட்டது த.வெ.க. அரசு!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 17-**

**எங்கள் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருந்தபோது அவரது சிந்தையில் உதித்த வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு முழுமையாக முடக்கி விட்டது என முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு குற்றம் சாட்டியுள்ளார்.**

**கல்வி வள்ளல் காமராஜர் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.7.2026) சென்னை அண்ணா சாலை பல்லவன் இல்லம் எதிரே அமைந்துள்ள ஜிம்கானா கிளப் வாசலில் அமைந்துள்ள கல்வி வள்ளல் காமராஜர் சிலைக்கு மேனாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.**

பிறகு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

மாணவச் செல்வங்களின் கல்விக்கு உயர்வு தந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். காமராஜர் ஒரு கர்ம வீரர்; அவர் வழியிலே திராவிட முன்னேற்றக் கழகத்திடைய தலைவர் கடமை வீரராக இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்திலும் சரி, ‘திராவிட மாடல்’ ஆட்சியுடைய நாயகனாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் எங்கள் உயிரினும் மேலான தலைவர் ஆட்சி காலத்திலும் சரி, காமராஜர் புகழுக்குப் புகழ் சேர்க்கின்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் 23 துறைகளை ஒருங்கிணைத்து, காமராஜர் பிறந்த நாளிலே, “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தை, காமராஜருக்குப் பெருமை சேர்க்கின்ற வண்ணம் தொடங்கி, பல லட்சம் மக்கள், பல ஆண்டு காலமாக அமைப்பு ரீதியான. இருப்பிடச் சான்றிதழ், சொத்து மாற்றம் சான்றிதழ், அதேபோல் ஜாதிச் சான்றிதழ் அதேபோல் வருமானச் சான்றிதழ் – ஆதார் அட்டை போன்றவை கிடைக்காமல், பல ஆண்டு காலம் தவித்த மக்களுக்கு, காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தால் பல லட்சம் மக்கள் பயன்பெற்றது, காமராஜர் நினைவைப் போற்றுகின்ற வகையில் அமைந்திருந்தது.

### காமராஜருக்கு புகழ் சேர்த்த கழக அரசு!

அந்த வகையிலே காமராஜரின் புகழுக்காக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும், காமராஜருக்காக, காமராஜர் பிறந்தநாளை ‘கல்வி வளர்ச்சி நாளாக’ அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவை இந்த நேரத்தில் போற்றுகிறோம். காமராசருடைய நினைவு இல்லமாக இருக்கின்ற அந்த இல்லத்தைப் புதுப்பிப்பத்திற்கு உத்தரவிட்ட திராவிட மாடல் ஆட்சியி னுடைய நாயகன் – திராவிட முன்னேற்றக் கழக தலைவரையும் இந்த நேரத்தில் நாம் நினைவு கூருவோம்.

அந்த வகையில், காமராஜரின் புகழுக்குப் புகழ் சேர்த்த, மறைந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், வாழும் கலைஞராக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களும், எந்நாளும் கல்விக்கும், மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கும் முன்னுரிமை தருகின்ற ஓர் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

### அறநிலையத்துறையில் விரும்பத்தகாத நிகழ்வுகள்!

**செய்தியாளர்:** பழனி கோயில் பிரச்சினை குறித்து அமைச்சர் பேசும்போது, முறைகேடு நடந்திருக்கிறது என்று சொல்லிருக்காரே, அதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

**முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ.:** அந்தத் துறையில் நடைபெறுகின்ற அனைத்து விரும்பத் தகாத நிகழ்வுகளையும், சட்டமன்றத்தினுடைய மானியக் கோரிக்கைகளில் தெளிவாக எடுத்துரைப்போம். 100 நாள் கணக்கென்று வைத்திருக்கின்றோம்.

**செய்தியாளர்:** தி.மு.க. ஆட்சியின்போது வேளச்சேரியில் பாலம் கட்டும் ஒப்பந்தத்தை ரத்து செய்திருக்கிறார்களே, நிதி நெருக்கடி என்ற ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறார்களே? அப்படி ஒரு காரணத்தைச் சொல்லிருக்கிறார்களே?

**பி.கே.சேகர்பாபு:** சென்னையை பொறுத்தளவில், வளர்ச்சித் திட்டங்கள் என்ற வகையிலே, சென்னை பெருநகர மாநகராட்சி



மேற்கொண்ட ரூ.800 கோடிக்கும் மேலான வளர்ச்சித் திட்டப் பணிகளை ரத்து செய்திருக்கின்றார்கள். ரத்து செய்யப்பட்ட பணிகளை, மீண்டும் எப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டு, மக்களுடைய அடிப்படை தேவை களுக்கு இன்றியமையாத பணிகள் என்பதை உணர்ந்து, வெகுவிரைவில் அந்தப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் சிந்தையில் உதித்திட்ட வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை முழுமையாக இன்றைக்கு முடக்கி வைத்திருக்கிறார்கள். அந்த ஒவ்வொரு திட்டமும், ஏழை – எளிய மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கின்ற திட்டங்கள்.

### எங்கள் தலைவருக்கு புகழ் என்பதால் முடக்குகிறார்கள்!

அந்தத் திட்டங்களையும் நிதி நெருக்கடி என்று காரணம் காட்டி, கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் என்கிற காரணத்தால், நூலகங்கள், படைப்பகங்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுக் கூடங்கள், பூங்காக்கள், அதேபோல் கழிவு நீரேற்று நிலையங்கள், அதேபோல் தடையின்றி வழங்கப்பட இருக்கின்ற மின்சாரங்கள் இப்படிப்பட்ட பணிகளுக்கு, இன்றைக்குத் தடைகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இவை அனைத்தும் மக்கள் வளர்ச்சிக்கான திட்டங்கள் என்பதால், இந்த ஆட்சியாளர்கள் அந்தப் பணியைத் தொடர வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டுகோள் வைக்கிறேன்.

**செய்தியாளர்:** தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களின் பெயர்களையெல்லாம் மாற்றி வைக்கிறதே த.வெ.க. அரசு?

**பி.கே.சேகர்பாபு :** அது அவர்களின் காழ்ப்புணர்ச்சியைத்தான் காட்டுகிறது. மக்கள் அனைத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், மயிலேடி பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு, அவர் துணை முதல் அமைச்சராக இருந்த போது திறக்கப்பட்ட கல்வெட்டு. அந்த மயிலேடி பூங்காவினுடைய கல்வெட்டை, இரண்டு நாட்களுக்கு முன்பு அகற்றி இருக்கின்றார்கள்.

### கல்வெட்டை அகற்றலாம் மக்கள் மனதிலிருந்து கழகத் தலைவரை அகற்ற முடியாது!

அதேபோல் ராயபுரம் மண்டலம் 5 எதிரிலே இருக்கின்ற முதல்வர் திருமண மாளிகையிலே பதிக்கப்பட்டிருந்த இரண்டு கல்வெட்டுகளையும் அகற்றி இருக்கின்றார்கள். இப்படி கல்வெட்டுகளை அகற்றுவதால், திராவிட முன்னேற்றக் கழக தலைவருடைய புகழ் பணிகளை எந்நாளும் மறைக்க முடியாது. கல்வெட்டுகளை வேண்டுமென்றால் அகற்றலாம். மக்களுடைய இதய சிம்மாசனத்திலே குடியிருக்கின்ற அவரது பெயரை எதை வைத்து அகற்றுவார்கள்? எதை வைத்து நீக்குவார்கள்?

ஆகவே, இந்தக் காழ்ப்புணர்ச்சியை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். தகுந்த பாடம் விரைவில் கற்பிப்பார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டியளித்தார்.

# மீன்வளத் துறை அமைச்சர் ஸ்ரீநாத்தை முற்றுகையிட்ட மீனவர்கள்!

## த.வெ.க. அமைச்சர் முன்பு தற்கொலைக்கு முயன்ற மீனவர்!

*சென்னை, ஜூலை 17-*

*காசிமேட்டில் மீன் வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் காரை, மீனவர்கள் முற்றுகையிட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில், மீன்வளத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாமில், அமைச்சர் ஸ்ரீநாத் கலந்து கொண்டார். அமைச்சர் முன்பு கோகுல் என்ற மீனவர் கையில் மண்ணெண்ணெய் கேனுடன் தற்கொலை முயற்சி செய்துகொள்ள முயற்சித்தார். அங்கிருந்த போலீசார் மண்ணெண்ணெய் கேனை பறிமுதல் செய்தனர்.*

*கோகுலின் விசைப்படகுகள் ஆந்திராவில் பிடிபட்டு இருப்பதாகவும், அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தங்களுக்கு அரசு வேலை வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.*

*மேலும், மீனவர்கள் தங்களது கோரிக்கையை அமைச்சரிடம் தெரிவிக்க முற்பட்டபோது, அவர் காரில் ஏறிச் சென்றார். இதனால் ஆத்திரம் அடைந்த மீனவர்கள் காரை மறித்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.*